# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### உற்சாகம் கரை புரண்ட கடலூர்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்க அமைப்பு தினம், தேர்தல் பிரச்சாரக் கையேடு வெளியீடு மற்றும் BSNLல் நடைபெற உள்ள 7ஆவது சங்க உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலையொட்டி கடலூரில் 22.03.2016 அன்று மாலை சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. BSNL ஊழியர் சங்க கடலூர் மாவட்ட தலைவர் தோழர் A.அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தோழியர் உஷா அஞ்சலி உரையாற்றினார். வந்திருந்த அனைவரையும் மாவட்ட உதவி செயலாளர் தோழர் R.V.ஜெயராமன் வரவேற்றார்.

இந்த சிறப்புக் கூட்டத்தில் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா மற்றும் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். நமது BSNL ஊழியர் சங்கம் இது நாள் வரை ஊழியர்களுக்கு பெற்றுத் தந்த பணப்பயன்களுடன், இந்த நிறுவனத்தை காக்க நமது மத்திய சங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளையும், அதனால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும், மத்திய அரசின் தவறான தாராளமய கொள்கைகளால் நமது BSNL உள்ளிட்ட பொதுத்துறை நிறுவன்ங்கள் சந்திக்கும் சவால்களையும், ஊழியர் பிரச்சனைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் நமது பொது செயலாளர் அவரது உரையில் விளக்கமாக எடுத்துரைத்தார்.

முன்னதாக நமது மத்திய சங்கம் ஆங்கிலத்தில் வெளியிட்டிருந்த தேர்தல் பிரச்சார கையேட்டை ‘ஒற்றுமை மற்றும் போராட்டங்களின் நாயகன் BSNL ஊழியர் சங்கம்’ என்று தமிழாக்கம் செய்து தமிழ் மாநில சங்கம் தயாரித்திருந்ததை நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு வெளியிட அதன் முதல் பிரதியை நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா பெற்றுக் கொண்டார். இதர பிரதிகளை கடலூர் மாவட்ட செயலாளர் தோழர் K.T.சம்பந்தம், திருச்சி மாவட்ட செயலாளர் தோழர் S.அஸ்லாம் பாஷா, வேலூர் மாவட்ட செயலாளர் தோழர் தங்கவேலு, குடந்தை மாவட்ட தலைவர் தோழர் மதியழகன், AIBDPA சங்கத்தின் கடலூர் மாவட்ட செயலாளர் தோழர் S.முத்துக் குமாரசாமி, தலைவர் தோழர் P.மாணிக்கமூர்த்தி உள்ளிட்ட தோழர்கள் பெற்றுக் கொண்டனர்.

இந்த சங்க அங்கீகார தேர்தலிலும் BSNL ஊழியர் சங்கமே முதன்மை சங்கமாக வெளி வரும் என்பதை உற்சாகத்துடன் உறுதி செய்யும் வகையில் 400க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற இந்தக் கூட்ட்த்தினை மாவட்ட பொருளாளர் தோழர் V.குமார் நன்றி கூறி முடித்து வைத்தார்.

இந்த சிறப்புக் கூட்டத்தினை மிக பிரமாண்டமாக ஏற்பாடு செய்த கடலூர் மாவட்ட சங்கத்தினையும் பங்கேற்ற அனைத்து தோழர்களையும் தமிழ் மாநில சங்கம் மனமார பாராட்டுகிறது.


தோழர். A.




கடலூர் மாவட்டம்
BSNLEU-வின் 16-வது


BSNLEU
தேர்தல்
A.அண்ணாமலை
பாரதி
கடலூர்




BSNL ஊழியர் சங்கம்
கடலூர் மாவட்டம்
BSNLEU


BSNL ஊழியர் சங்கம்
கடலூர் மாவட்டம்
BSNLEU
தேர்தல் சிறப்புக்கூட்டம்
R.V.ஜெயராமன்
P.அபிமன்யு


BSNL ஊழியர் சங்கம்
கடலூர் மாவட்டம்
BSNLEU
தேர்தல் சிறப்புக்கூட்டம்